# 9

# சபையைக் குறித்து கிறிஸ்தவர்கள் விசுவாசிப்பது என்ன

*புதிய ஏற்பாட்டின் ஒரு மையைத் தலைப்பு சபை என்பது. ஆகையால் கிறிஸ்தவர்கள் சபையைக் குறித்து ஏதோ விசுவாசிக்கிறார்கள் - ஆனால் அது என்ன?*

*மக்கள் மத்தியில் சபையைக் குறித்து பல்வேறு வகையான கண்ணோட்டம் நிலவுகிறது. சபையே தங்களை இரட்சிக்கிறது என்று கருதி, சபை எல்லா வகையிலும் முக்கியமானது என்று சிலர் காணுகின்றனர். மற்றவர்கள் சபை முக்கியமே இல்லை என்று கருதுகின்றனர்; அவர்களைப் பொறுத்தமட்டில், இயேசுவால் இரட்சிக்கப்படும் ஒரு நபர் எந்த ஒரு மார்க்க குழுவிலும் இருக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதுகின்றனர். வேறு சிலர் கிறிஸ்தவத்தை அறிக்கையிடுகிற யாவரும் ஏதோ ஒரு சபையில் அங்கம் வகித்தால் போதும், அவர் எந்த சபையில் சேர்கிறார் என்பது முக்கியமில்லை என்று விசுவாசிக்கின்றனர். அவர்களுடைய கூற்றுப்படி, காணுகிற அனைத்து நாமகரணக் கூட்டங்களுமே சமமான சட்டரீதியானவைகளும், புதிய ஏற்பாட்டுச் சபைக்கு சமமானது என்றும் கருதுகின்றனர். சிலர் ஒரு நபர் ஞானஸ்நானம் பண்ணப்படும்போது கர்த்தருடைய சபையில் சேர்த்துக் கொள்ளப் படுகிறார் என்றும் இயேசு தமது சரீரத்தில் அங்கம் வகிக்கிற எல்லாருமே இரட்சிக்கப் படுவதற்காக மரித்தார் என்றும் விசுவாசிக்கின்றனர்.*

*சபையைக் குறித்த உண்மை என்ன? கிறிஸ்தவர்கள், தேவனுடைய மீட்பின் திட்டத்தில் அது குறிப்பிடத்தக்க கடமையாற்றுவதால், சபை அவசியமானது என்று விசுவாசிக்கின்றனர். அப்படியொரு உபதேசக் கோட்பாட்டை ஏன் ஏற்றுக் கொள்ள வேண்டும்? ஏனெனில் திருமறை போதிப்பதால். குறிப்பாக, புதிய ஏற்பாடு சபையைக் குறித்துப் போதிக்கும் ஐந்து போதனைகளைக் கவனிப்போம்.*

## *1. சபை ஆதிகாலமுதலே தேவனுடைய திட்டத்தில் இருந்த ஒன்று*

*பவுல் எழுதியதாவது,*

> பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவனாகிய நான் கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கிறதற்காக இந்தக் கிருபை எனக்கு அளிக்கப் பட்டிருக்கிறது. தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த

*அநாதி தீர்மானத்தின்படியே, உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக இயேசு கிறிஸ்துவைக் கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிப்பதற்கு, இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது (எபேசியர் 3:8-11).*

*"தேவனுடைய அநந்த ஞானமானது" "சபையின் மூலமாய் இப்பொழுது தெரிய வரும் பொருட்டாக" வெளிப்படையாய்க் காண்பிக்கிறதற்கு "தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்தது." இன்னொரு வார்த்தையில் சொன்னால், சபை தேவனுடைய நித்திய நோக்கங்களில் ஒன்றாயிருந்துள்ளது. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களில் சபையைப் பற்றி பேசப்பட்டுள்ளது. "கடைசி நாட்களில்" "கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம்" ஸ்தாபிக்கப்படும் (ஏசாயா 2:2) என்று ஏசாயா முன்னுரைத்த போது, அவர் சபை ஸ்தாபிக்கப்படுதலைப்பற்றி கூறிக் கொண்டிருந்தார். அதேபோல, தானியேல் முன்னுரைத்து - ரோம இராஜாக்களின் நாட்களில் - தேவன் என்றென்றைக்கும் "அழியாத இராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார்" என்று முன்னுரைத்தார் (தானியேல் 2:44), சபையின் வருகையை அவர் முன்னதாகக் கண்டார்.*

*இவைகளையும் மற்ற தீர்க்கதரிசனங்களையும் யூதர்கள் தவறாக புரிந்து கொண்டார்கள்; அவர்களின் விளக்கத்தின்படி, உலகப்பிரகாரமான ஒரு இராஜ்யத்தின் ஸ்தாபிதத்தையும் பூமிக்குரிய மேசியாவால் அது ஆளுகை செய்யப்படும் என்று தீர்க்கதரிசிகள் முன்னுரைத்ததாக நினைத்தனர். இதற்கு முரணாக இயேசு "இந்த உலகத்துக்குரியதல்லாத ஒரு இராஜ்யமாகிய சபையை ஸ்தாபிக்கவே வந்தார்" (யோவான் 18:36). அவருடைய சபையின் ஸ்தாபிதம் தேவனுடைய அநாதி நோக்கத்தின்படியே வந்தது. இதன் விளைவாக சபையானது, சிலர் நம்பிக் கொண்டிருப்பது போல, தேவனுடைய பின்னதான ஆலோசனையல்ல - மாமிசப் பிரகாரமான இராஜ்யத்துக்குப் பதிலாக இது ஸ்தாபிக்கப்பட்டதல்ல. அவர் ஸ்தாபிக்க எண்ணினார் - யூதர்கள் இயேசுவை இராஜாவாக ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்த படியால் (உலகப்பிரகாரமான சபையை) ஸ்தாபித்தார் என்கின்றனர். சபையை முக்கியத்துவமானதாய் காணாதவர்கள் தேவனுடைய ஞானத்தைக் குறித்து கேள்வி எழுப்புகிறார்கள், அவர் சபையைத் தமது நித்திய (அநாதி) திட்டத்தில் அடக்கியிருந்தார்.*

## *2. சபை பல வித்தியாசப்பட்ட வழிகளில் சித்தரித்து காட்டப்பட முடியும்.*

*சபையை விளக்கப்படுத்த பயன்படுத்தப்பட்ட வார்த்தைகள் கீழே வருமாறு:*

- *"சபை" - அது "சபைக் கூட்டம்," "கூடிவருகிற கூட்டம்"* (Gk.: *ekklesia*) *அல்லது "திரளுகிற கூட்டம்," விசேஷித்த நோக்கத்திற்காக "அழைக்கப்பட்ட" ஒரு கூட்ட மக்கள். (உதாரணமாக, காண்க நடபடிகள்*

*4:32; 5:11.)*

- *"இராஜ்யம்"* - "நான் என் சபையைக் கட்டுவேன்," என்று இயேசு அறிவித்தபின், பேதுருவினிடத்தில் தாம் இராஜ்யத்தின் திறவுகோல்களைத் தருவேன் என்றார் (மத்தேயு 16:18, 19), இந்த வசனப் பகுதியில் "சபை" என்ற வார்த்தையும் "இராஜ்யம்" என்ற வார்த்தையும் ஒன்றையே குறிப்பிடுகிறது.
- *"வீட்டார்"* அல்லது *"குடும்பம்"* - பவுல் தீமோத்தேயுக்கு எழுதி "தேவனுடைய" வீட்டில் நடக்க வேண்டிய வகையை அறிந்து கொள்ளச் சொல்லி, அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாயிருப்பதாகக் குறிப்பிட்டார் (1 தீமோத்தேயு 3:15).
- *"சரீரம்"* - பவுல் "அவருடைய சபையாகிய (கிறிஸ்துவின்) சரீரம்" என்று பேசினார் (எபேசியர் 1:22, 23; மேலும் காண்க கொலோசெயர் 1:18).
- *"கிறிஸ்துவின் மணவாட்டி"* - கிறிஸ்துவுக்கும் சபைக்கும் இடையேயான உறவுமுறை ஒரு புருஷனுக்கும் மனைவிக்கும் இடையேயான உறவுமுறை போன்றது என்பதை எபேசியர் 5:23-31, மற்றும் ரோமர் 7:4ல் ஒரு மனைவி தன் புருஷனோடு சேர்க்கப்படுவதுபோல கிறிஸ்துவினிடத்தில் கிறிஸ்தவர்கள் சேர்க்கப்பட்டனர் என்று சொல்லப்படுகிறது.

சபைக்குக் கொடுக்கப்பட்ட இந்த பதவி நியமனப் பெயர்கள் சபையைக் குறித்த முக்கிய உண்மைகளை வலியுறுத்துகின்றன. (1) கிறிஸ்து இராஜ்யத்துக்கு ராஜாவாக சரீரத்துக்குத் தலையாக இருக்கிறபடியால், *அவரே சபையின்மேல் அதிகாரமுடையவர்.* (2) *கிறிஸ்து தமது சீஷர்களிடத்தில் நெருங்கிய நட்புறவு கொண்டுள்ளார்.* ஒரு மனிதனின் சரீரத்தில் உள்ள தனித்தனி அங்கங்கள் தலையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது போல கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுடன் நெருக்கமாக நட்புறவு கொண்டுள்ளனர். (3) *ஒரு நெருங்கிய நட்புறவு சபையிலுள்ள அதின் அங்கத்தினர்களுக்குமிடையே பகிர்ந்து கொள்ளப் படுகிறது.* அவர்களெல்லாம் ஒரு குடும்பத்தில் உள்ள சகோதரர்களைப் போலவும் சகோதரிகளைப் போலவும் நெருங்கின நட்புறவுள்ளவர்களாயிருக்கிறார்கள், ஒரு சரீரத்தின் அவயவங்களான, தோள்களும், கைகளும்போல் இணைந்துள்ளனர். சபை அங்கத்தினர்கள் சபையாக ஒன்று கூடி, ஆராதனையில் ஐக்கியமாக பங்கு பெறுகின்றனர்.

## 3. சபை என்பது உலகளாவிய மற்றும் உள்ளூர் சபைகளாக உள்ளன

இயேசு சொன்னார்,

> மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கோள்வதில்லை. பரலோகத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப் பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார் (மத்தேயு 16:18, 19).

இந்த வசனப் பகுதியில் இயேசு உலகளாவிய சபையைப் பற்றிப் பேசுகிறார், இது உலகளாவிய தேவனுடைய ராஜ்யம். ஆயினும், ரோமர் 16:16ல் "கிறிஸ்துவின் சபையார்" (சபைகள்) என்று பவுல் பேசினார், இது உலகளாவிய சபையின் உள்ளூர் தனித்தனி சபைகளைக் குறிப்பிடுகிறது. "ஆசியாவிலுள்ள ஏழு சபைகள்" வெளிப்படுத்தின விசேஷம் 2, 3 அதிகாரங்களில், "கலாத்தியாவிலுள்ள சபைகள்" கலாத்தியர் 1:2 மற்றும் 1 கொரிந்தியர் 16:1 ஆகிய வசனங்களில் காணப்படுகிறது. "சபை" என்னும் வார்த்தை உள்ளூரில் கூடிவருகிற கூட்டமாகிய சபைக்கும் பொருந்தும் (காண்க 1 கொரிந்தியர் 14:34). இப்படி "சபை" என்பதன் பலதரப்பட்ட பயன்பாட்டு வார்த்தைகள் புதிய ஏற்பாட்டில், காணப்படும் முக்கிய உண்மையாதெனில், *உலகளாவிய ரீதியில், ஒரே ஒரு சபையை மட்டுமே குறிக்கும்.* இதற்கு ஒப்பாகத் தான் பவுலும், "ஒரே சரீரம்" என்று சொன்னார் (எபேசியர் 4:4); "சரீரம்" என்பது "சபை" (எபேசியர் 1:22, 23).

புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப் பட்டுள்ள உள்ளூர் சபைகள் இயேசுவின் ஒரே சபைதான். இவைகள் அனைத்தும் உபதேசத்திலும் செயல்களிலும் ஒரே மாதிரியான அமைப்பைக் கொண்டவை. பவுல், "சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தை பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய் சீர் பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்கு புத்தி சொல்லுகிறேன்" (1 கொரிந்தியர் 1:10). அவர் வலியுறுத்தி உபதேசங்களில் சபை ஒன்றிணைந்திருக்கும்படி உபதேசம் பண்ண ஒரே சரீரம், ஒரே ஆவி, ஒரே நம்பிக்கை, ஒரே கர்த்தர், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம், மேலும் ஒரே தேவனும் உண்டு என்றார் (எபேசியர் 4:4-6).

முதல் நூற்றாண்டு சபைகள் ஒன்றுபோல் ஆராதித்தன (1 கொரிந்தியர் 14:33, 34; 16:1, 2), ஒரே மாதிரியான அமைப்பைக் கொண்டிருந்தன (நடபடிகள் 14:23), ஒரே உபதேசக் கோட்பாட்டை போதித்தனர் (நடபடிகள் 15). வித்தியாசமான உபதேசத்தை யாராகிலும் போதித்தால் அது கள்ள உபதேசம் (கலாத்தியர் 1:8, 9). இன்றுள்ள அனைத்து நாமகரண (பெயர்) சபைகளும் உலகளாவிய ஒரே விதமான போதனையைக் கொண்டிராமல் பலதரப்பட்ட உபதேசங்களையும் செயல்களையும் செய்து கொண்டிருக்கும்போது, உலகளாவிய ஒரே சபையின் அங்கமாயிருப்பது எப்படி?

## 4. கிறிஸ்து தமது சபையில் நெருக்கமான நட்புறவுள்ளவராக இருக்கிறார்

புதிய ஏற்பாடு கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்குமிடையேயுள்ள நட்புறவை விளக்கப் படுத்துகிறது.

- *கிறிஸ்து சபையை கட்டினார்.* அவர் தமது அப்போஸ்தலரிடம் "நான் என் சபையைக் கட்டுவேன்" என்றார் (மத்தேயு 16:18).
- *கிறிஸ்து தமது சபைக்குச் சொந்தக்காரர்.* அவர் அதை "என்னுடைய சபை" என்று சொன்னார் (மத்தேயு 16:18). தனிப்பட்ட உள்ளூர் சபைகள் அவருடையவை; அவைகளே "கிறிஸ்துவின் சபைகள்" (ரோமர் 16:16).
- *கிறிஸ்து தமது சுய இரத்தத்தினால் சபையை கிரயத்துக்கு வாங்கினார்.* எபேசு பட்டணத்து சபை மூப்பர்களிடம் பேசும்போது, பவுல், "தேவன்

*தமது சுய இரத்தத்தினால் சம்பாதித்துக் கொண்ட சபை" என்று சுட்டிக் காட்டினார் (நடபடிகள் 20:28).*

- *கிறிஸ்து சபைக்கு இரட்சகராயிருக்கிறார் ("சரீரத்துக்கு இரட்சகர்"; எபேசியர் 5:23ஆ).*
- *கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறார், சபை அவருடைய சரீரமாயிருக்கிறது.* "... எல்லாவற்றையும் எல்லாவற்றிலும் நிரப்புகிறவருடைய நிறைவான சரீரமாகிய சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்'' (எபேசியர் 1:22, 23). "கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறார்" என்று பவுல் எழுதினார் (எபேசியர் 5:23அ).
- *கிறிஸ்து சபையை அன்புகூருகிறார்.* "புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து" என்று வாசிக்கிறோம் (எபேசியர் 5:25).
- *கிறிஸ்து சபைக்காக மரித்து, அதின் அங்கத்தினர்களை சுத்திகரித்து பரிசுத்தமாக்கினார்.* அவர் சிலுவையில் அறையப்பட்டார் அதினாலே "தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும்" (எபேசியர் 5:26).
- *சபை கிறிஸ்துவின் மணவாட்டி.* (காண்க வெளிப்படுத்தின விசேஷம் 19:7-9; 21:9; 22:17.)

இப்படி சபையோடு கிறிஸ்துவுக்கு நெருங்கிய நட்புறவு இருக்கிறபடியால், அது நமது அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமானது. இன்று யாராகிலும் சபையை வெறுத்து விரோதமாய்ப் பேசினால் கிறிஸ்து அன்புகூர்ந்து, அதற்காகவே மரித்து, இரட்சிக்கிற அவருடைய சரீரத்துக்கு விரோதமாய் அவர்கள் செயல்படுகிறார்கள்! "கிறிஸ்துவை கொடுங்கள், ஆனால் சபை வேண்டாம்" என்போர் சபை தான் கிறிஸ்துவின் மார்க்கத்துக்கு முக்கியமான பகுதி என்பதை உணரத் தவறுகிறார்கள். சபையைக் குறித்து இயேசு கொண்டிருந்த எண்ணமே நமக்கும் இருக்க வேண்டும். நாம் சபையை நேசிக்கவும், தேவைப்படுமானால் சபைக்காக பாடுபட்டு மரிக்கவும் வேண்டும்.

சபையைத் துன்பப் படுத்தும்படி தமஸ்குப் பட்டணத்துக்கு சவுல் போய்க் கொண்டிருக்கையில், கிறிஸ்து அவனுக்குத் தரிசனமாகி, "சவுலே, சவுலே, நீ ஏன் என்னைத் துன்பப் படுத்துகிறாய்?" என்று கேட்டார். அதற்கு சவுல், "ஆண்டவரே நீர் யார்?" என்று கேட்டான். அதற்கு இயேசு, "நீ துன்பப் படுத்துகிற கிறிஸ்து நானே" என்றார் (நடபடிகள் 9:4, 5). சபையைத் துன்பப் படுத்தினதால் சவுல் கிறிஸ்துவை துன்பப்படுத்திக் கொண்டிருந்தான்! கிறிஸ்து தம்மை சபையோடு அடையாளப் படுத்துகிறார்! ஆகையால், சபையை புறக்கணிப்போர் கிறிஸ்துவைப் புறக்கணிக்கிறார்கள், சபையை ஒதுக்குகிறவர்கள் கிறிஸ்துவை ஒதுக்கித் தள்ளுகிறார்கள், சபையை கை விடுவோர் கிறிஸ்துவைக் கைவிடுகிறார்கள்! மறுபக்கம், சபையை மதித்து சபையில் அன்புகூர்ந்து சபைக்காக ஊழியஞ் செய்கிற கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்கு மதிப்புக் கொடுத்து அவரிடத்தில் அன்புகூர்ந்து கிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்கிறார்கள். ஒருவர் சபையைக் குறித்து கொண்டுள்ள எண்ணமே கிறிஸ்துவைக் குறித்து அவர் கொண்டுள்ள எண்ணமாக வெளிப்படும்.

## *5. இயேசு கட்டிய ஒரே சபையில் தான் இரட்சிப்பு இருக்கிறது*

*பெந்தெகோஸ்தே நாளில், பேதுரு கிறிஸ்துவை பிரசங்கித்ததைக் கேட்ட ஜனங்கள் தாங்கள் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்று கேட்டனர் (நடபடிகள் 2:37). பேதுரு அவர்களை மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்று பாவமன்னிப்பைப் பெறச் சொன்னார் (நடபடிகள் 2:38). அவருடைய வார்த்தைளை ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். "அன்றைய தினம் ஏறக் குறைய மூவாயிரம் ஆத்துமாக்கள் சேர்த்துக் கொள்ளப் பட்டார்கள்" (நடபடிகள் 2:41). இப்படியாக சபை தனது துவக்கத்தைப் பெற்றது. நடபடிகள் 2ம் அதிகாரம் இந்தக் கிறிஸ்தவர்கள் தொடர்ந்து நாள் தோறும் "தேவனைத் துதித்து ஜனங்களிடத்தில் தயவு பெற்றிருந்தார்கள். இரட்சிக்கப் படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்" என்கிற வார்த்தைகளோடு நிறைவு பெறுகிறது (நடபடிகள் 2:47).*

*இரட்சிக்கப்பட்டவர்கள் சபையிலே சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். அதன் விளைவு, இரட்சிக்கப்படுகிற அனைவரும், கிறிஸ்து இரட்சகராயிருக்கிற அவருடைய சரீரமாகிய சபையில் இருக்கிறார்கள் (எபேசியர் 5:23). சபை இரட்சிப்பதில்லை மாறாக இரட்சிக்கப் பட்டவர்கள் சபையில் இருக்கிறார்கள். ஒருவர் இரட்சிக்கப்படும்போது கர்த்தர் அவனை அல்லது அவளை சபையிலே சேர்த்துக் கொள்கிறார் (நடபடிகள் 2:47). எனவே அவருடைய சபையில் இருக்கிற யாரும் இரட்சிக்கப்படாமல் இருக்க மாட்டார்கள்; இரட்சிக்கப்படுகிற ஒவ்வொருவரும் சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிந்துள்ளதால் அவருடைய சபையிலே சேர்த்துக் கொள்ளப் படுகிறார்கள். கர்த்ருடைய சபைக்குள் யார் இருப்பது என ஜனங்கள் முடிவெடுப்பதில்லை; கர்த்தரே அந்த முடிவை எடுக்கிறார்!*

## *முடிவுரை*

*சபை முக்கியமானது என்று திருமறை போதிக்கிறது. நீங்கள் இரட்சிக்கப் படவிரும்புவீர்களேயானால், இயேசுவுக்குச் சொந்தமான சபையிலே - நீங்கள் இருக்க வேண்டும்.*

*நம்மை அன்புகூர்ந்து இரட்சிக்கும்படியாக மரித்த இயேசுவின் அந்த சபையிலே நீங்கள் இருப்பதை எப்படி உறுதிப்படுத்திக்கொள்ளமுடியும்? புதிய ஏற்பாடு சொல்லுகிறபடி இருக்கிற சபையைக் கண்டு பிடியுங்கள்! முதல் நூற்றாண்டு போல செயல்படும் சபையை, அதே போல் ஆராதித்து, ஆளுகை அமைப்பைப் பெற்று, அதே உபதேசத்தைப் போதிக்கிற உள்ளூர் சபையைக் கண்டுபிடியுங்கள்.*

*அப்படிப்பட்ட சபையை ஒரு முறை நீங்கள் கண்டு பிடித்து விட்டால், நீங்கள் அதிலே அங்கம் வகிப்பது எப்படி? இரட்சிக்கப்பட புதிய ஏற்பாட்டில் என்ன செய்தார்களோ அதைச் செய்யுங்கள் - அதாவது பெந்தெகோஸ்தே நாளில் மூவாயிரம் பேர் செய்தது என்ன? அவர்கள் திறந்த இருதயத்தோடு இயேசுவைப் பற்றி பேதுரு சொன்னவற்றைக் கேட்டு விசுவாசித்தார்கள்: "ஆதலால் - நீங்கள் சிலுவையில் அறைந்த இயேசுவையே - தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார் என்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக் கடவர்கள்" (நடபடிகள் 2:36). அவர்கள் அந்த விசுவாசத்தை*

*அறிக்கையிட சித்தமுள்ளவர்களாயிருந்தார்கள் (ரோமர் 10:10; மத்தேயு 10:32). அவர்கள் ஆர்வமாய் பேதுருவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார்கள்: "மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்பிற்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (நடபடிகள் 2:38). அவனுடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். "அன்றைய தினம் ஏறக் குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப் பட்டார்கள்" (நடபடிகள் 2:41) என்று நாம் வாசிக்கிறோம்.*

*நீங்களும் அதேபோல செய்ய முடியும். பாவிகள் என்று உங்களை உணருங்கள், இனி பாவத்தில் நிலைத்திருக்கப் போவதில்லை என்று முடிவு செய்யுங்கள். தண்ணீரிலே ஞானஸ்நானம் அல்லது முழுக்குப் பெறுங்கள். இது பாவமன்னிப்பிற்காக. அப்பொழுது நீங்கள் மன்னிக்கப்பட்டு கர்த்தர் தமது சபையிலே உங்களைச் சேர்த்துக் கொள்வார் (நடபடிகள் 2:47; 1 கொரிந்தியர் 12:13). நீங்கள் ஞானஸ்நானம் பண்ணப் படும்போது, நீங்கள் இரட்சிக்கப்படுகிறீர்கள் (1 பேதுரு 3:20, 21) "அவர் இரட்சிக்கிற சபையிலே அங்கத்தினராவீர்கள்! சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்" (எபேசியர் 3:21).*